**தேசிய இளைஞர் படையணி- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 **நிதிக்கூற்றுக்கள்**

1.5.1 **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்டும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற படையணிக்குச் சொந்தமான கிரயம் ரூபா 432,263,958 ஆன நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பிடப்பட்ட வழு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட இச்சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறுகிய காலத்திற்குள் உரிய சொத்துக்கள் அனைத்தும் மதிப்பிடப்படாமையால், சங்கீதப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் மட்டுமே 2021 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளது. எஞ்சிய சொத்துக்கள் அடுத்த வருடத்தில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரித்தல் மற்றும் குறிப்பிட்ட வெளிப்படுத்தல் கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 93 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் வரிசை விடயங்களில் மேலும் உப பிரிவுகளைச் சமர்ப்பிக்கும் போது, நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வரையில் அவை வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைமைக் கூற்றுக்களில் அல்லது | 2021 ஆம் ஆண்டில் கணக்கு நிதிக்கூற்றுக்கள் குறிப்புக்களின் கீழ் நடைமுறை வேலைகளின் விரிவான குறிப்பு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்புக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் படையணியின் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 2,236,026,793 ஆன நடைமுறை வேலைகளுக்கான விரிவான குறிப்பொன்று நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் எதிர்கால ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, கழிவு விகிதங்கள், ஊழியர் வருமானம் மற்றும் ஏனைய ஆயுட்கால அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டு பிந்திய பணிக்கொடை ஒதுக்கங்களுக்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தேசிய இளைஞர் படையணியால் மீளாய்வாண்டின் இறுதியில் 404 ஊழியர்களுக்கான பணிக்கொடையாக ரூபா 37,083,980 ஆனது ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான பணிக்கொடை ஒதுக்கக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய இளைஞர் படையணியின் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் கணக்கிடப்படுவதற்காக இதுவரை பணிக்கொடை ஒதுக்கக் கொள்கையொன்று தயாரிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் அக்கொள்கைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21(ஊ) பந்தியின் பிரகாரம் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உட்பட குறிப்புக்கள் மற்றும் ஏனைய விரிவான குறிப்புக்கள் | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படும் போது குறிப்பிட்ட வெளிப்படுத்தல் |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ள போதிலும், படையணியால் வருமானம்,செலவு,அரச மானியப் பெறுவனவுகள்,குறுங்கால முதலீடுகள்,செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகளுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | | கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 வருடம் வரையான காலப்பகுதியில் நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருந்த ரூபா 1,077,517,669 ஆன கிரயமுள்ள 15 பயிற்சி நிலையங்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்படுவதற்கு பதிலாக 2020 திசெம்பர் 31 வரையில் நடைமுறை வேலைகளாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 682,875,647 கிரயமான 09 பயிற்சி நிலையங்களுக்காக வருடாந்தப் பெறுமானத்தேய்வுச் செலவுகள் ரூபா 34,143,782 உம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | படையணியில் Excel மென்பொருளொன்றின் உதவியுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டு வருகின்றது. 2016-2018 வருடத்திற்குள் திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் நிலையான சொத்துக்கள் அதிகளவில் கொள்வனவு செய்யப்படாமையால் அப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்ட போது பல நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன. அதன் பிரகாரம் சொத்துக்கள் மீண்டும் மதிப்பிடப்படுவதுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு, 2021 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து நீங்கிய 37 பதவியணிக்காக செலுத்த வேண்டியிருந்த | வருடத்தின் பணிக்கொடை ஒதுக்க மீதி கணக்கிடப்படும் போது தவறுதலாக 37 ஊழியர்களுக்காக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 3,604,183 ஆன பணிக்கொடைத் தொகையானது முன்னைய வருட சீராக்கமொன்றாக திரண்ட பற்றாக்குறைக்கு சீராக்குவதற்கு பதிலாக 2020 ஆம் ஆண்டில் செலவொன்றாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் 2020 ஆம் ஆண்டில் மிகை அப்பெறுமதியால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஆனால் 2021 ஆம் அண்டிற்குரிய ரூபா 2,187,544 ஆன 10 செலவு விடயங்கள் மீளாய்வாண்டில் செலவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் வருடத்தின் செலவுகள் மற்றும் மிகை என்பன முறையே அந்த அளவினால் அதிகமாகவும் மற்றும் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | ஒதுக்கப்படாத அளவு மற்றும் 2020 ஆம் ஆண்டில் பணிக்கொடை ஒதுக்க மீதி மற்றும் பணிக்கொடை செலவுகள் அதிகமாகக் காட்டப்பட்டிருந்த தவறு 2021 ஆம் ஆண்டின் பணிக்கொடை ஒதுக்கக்கூற்று தயாரிக்கப்படும் போது திருத்தப்படும். | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெற வேண்டியவைகளில் குறிப்பிடப்பட்டிருந்த படையணியின் வெளியார் நிறுவனமொன்றான சிறு வியாபார அபிவிருத்தி பிரிவினால் 2015 முதல் 2020 வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் பயன்பாட்டிற்கான மற்றும் வீதவரிக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 13,144,155 ஆனது 2022 பெப்ரவரி 25 வரையில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் | அந்நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டிற்கான செலவுகளுக்கான கொடுப்பனவுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் கடந்த வருடங்களுக்காகச் செலவுகள் செலுத்தப்படுவதற்கு ஒதுக்கங்கள் அந்நிறுவனத்திடம் இல்லாமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் | படையணிக்கு பெற வேண்ய அறவீடுகள் விரைவில் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் அவ்விடயம் தேசிய இளைஞர் படையணி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 வருடம் வரையான காலப்பகுதிக்கான தீர்க்கப்படாத மொத்தம் ரூபா 59,901,715 ஆன 19 செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் பொறுப்பொன்று இல்லாதிருந்தால் நிதிக் கூற்றுக்களில் மீண்டும் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணையில் குறிப்பிடப்பட்டிருந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான செலுத்த வேண்டிய பழைய மீதிகளான ரூபா 59,901,715 ஆன தொகைக்கான அனைத்து கடப்பாடுகளும் தற்போது தீர்க்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தொகை விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 வரை நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டிருந்த 03 பயிற்சி நிலையங்கள், நிர்மாண ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்த 04 பயிற்சி நிலையங்கள் மற்றும் ஆரம்ப அளவுகளில் குறைபாடு காணப்பட்ட காரணத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த பயிற்சி நிலையக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 73,300,221 | ஹோமரன்கடவலயில் முன்பிருந்த கட்டிடத்தின் எஞ்சியுள்ள பணிகள் முடிவடைவது தொடர்பாக இறுதித் தீர்மானத்திற்கு வந்ததன் பின்னர் விரைவில் மிகுதி முற்பணத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாண முற்பணம் விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன நிர்மாண முற்பணம் இதுவரை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய உபகரண மற்றும் இயந்திரங்கள் அமைப்பிற்கு(NEMO) தேசிய இளைஞர் படையணியின் 10 புதிய நிலையங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையங்களின் 21 கட்டிட அலகுகளுக்கான நிர்மாணங்களுக்கான ஒப்பந்தம் திறந்த டெண்டர் நடைமுறைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாணங்களின் முன்னேற்றம் தோல்வியடைந்ததால் 2020 சனவரி 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்நிர்மாண ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. என்னும் தேசிய இளைஞர் படையணியால் NEMO நிறுவனத்திற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 109,234,674 ஆன மொத்த முற்பணத் தொகையில் ரூபா 43,856,413 ஆனது இந்நிர்மாண நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தினால் பிடித்து வைக்கப்பட்ட தொகை மற்றும் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டுக்களில் ரூபா 65,378,261.28 ஆனது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 109,234,474.36 ஆன தொகையில் தீர்க்கப்பட்டுள்ளதுடன் மேலும் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 43,356,413 ஆன முற்பணத் தொகை தேசிய உபகரண மற்றும் இயந்திரங்கள் நிறுவனத்திற்கு இறுதிக் கணக்குகள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது விரைவில் தீர்க்கப்படும். | ஒப்பந்த நிர்வாகம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் அறவீடுகள் விரைவில் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 5.1 ஆம் பந்தி | ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியபோதிலம் படையணியால் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிறைவேற்றுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>அதன் பிரகாரம் 2023-2027 வருடங்களுக்காக ஆனால் இதுவரை தேசிய இளைஞர் படையணி அதிகார சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் செயற்திட்டத்துடன் அது மற்றும் சமகாலத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு முறையான ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படுவதற்கான றடவடிக்கை தற்போது முடிவடைந்தள்ளது. | படையணியின் ஒருங்கிணைந்த திட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு அது வருடாந்தம் நாளதுவரையாக் கப்படுதல் வேண்டும். |
| (ii) 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | கொவிட் 19 அச்சுறுதல் போன்ற இயற்கை நிலைமைகள் காரணமாக நாட்டில் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் | சட்டரீதியான தேவையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் விரைவில் தயாரிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் படையணியால் குறிப்பிட்ட திகதிக்கு 09 மாதங்கள் தாமதமாகி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஊரடங்கு போன்ற நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டமை யூன் மாதம் வரையில் தாமதமடைந்திருந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். 2020 வருடாந்த கணக்கு அறிக்கைகள் 2021/10/27 இல் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் 2021/11/25 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,250,224 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 65,630,802 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 85,881,026 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு இளைஞர் அபிவிருத்திச் செலவுகள் ரூபா 102,514,194 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் படையணியின் தலைமை அலுவலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற பதிவுரிமை வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 29,050,000 பெறுமதியான 07 வாகனங்கள் இதுவரை படையணியின் பெயரில் கையேற்கப்படாததுடன் படையணியில் 2020 திசெம்பர் 31 இல் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த காணிகளின் எண்ணிக்கை 64 ஆக இருந்ததுடன் அக்காணிகளில் 19 | இளைஞர் படையணித் தலைமை அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற LK 6091 லொறி வாகனம், PD 9016, PE 0914 மற்றும் GC 4505 ஆம் இலக்க வாகனங்களின் பதிவு உரிமை இளைஞர் படையணிக்கு கையேற்பதற்குத் தேவையான அங்கீகாரம் குறிப்பிட்ட நிறுவனங்களினால் தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன் | படையணியின் நோக்கத்தை நிறைவேற்று வதற்காக சொத்துக்கள் முகாமைத்துவச் செயற்திறனாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | |
|---|---|
| காணிகள் மாத்திரமே படையணிக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 45 காணிகளின் கையேற்றல் நடவடிக்கைகள் இதுவரை முடிக்கப்பட்டிருக்க வில்லை. | அதன் பிரகாரம் எஞ்சிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| படையணியின் சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 18 இல் 05 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அபிவிருத்தி உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக முறையே 122 மற்றும் 28 வீதம் வெற்றிடங்கள் காணப்பட்டன. ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 297 காணப்பட்டதுடன் அவற்றில் நிலைய அதிபர் உதவி நிலைய அதிபர் உதவிப்பணிப்பாளர் மற்றும் பயிற்சி ஆலோசகர் போன்ற பதவிகளுக்கு உரிய வெற்றிடங்கள் காணப்பட்டன. | அரசின் அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது சட்டரீதியான நிறுவனங்களின் ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் வசதிகள் இளைஞர் படையணி ஊழியர்களுக்கு உரித்து இல்லாததால் அவ்வாறான நிறுவனங்களில் பதவிகளுக்கு நியமனம் பெறுகின்ற வாய்ப்பை பெறுகின்ற இளைஞர் படையணி ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டில் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்படாமையால் இளைஞர் படையணியிலிருந்த கணிசமானளவு ஆலோசகர்கள் படையணியிலிருந்து விலகிச் சென்றமையால் இவ்வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடங் களுக்கான பதவிகள் விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு படையணியின் மனிதவள முகாமைத்துவம் செயற்திறனாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |